கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.278/2021

வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **எம்.வி.ராஜேந்திரன்** | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 07.03.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் 19.06.2024 தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். தாவா சொத்துக்களில் எனக்குரிய பாதி பங்கினை பொறுத்து முதல் நிலை தீர்ப்பாணை வழங்க கோரி நான் தாவா தாக்கல் செய்துள்ளேன். நானும் 1 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து தொழில் செய்து வகைக்கு Department of Industr and Comers வழங்கிய சான்று தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1** குறியிடப்படுகிறது. மேற்படி நானும் 1 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து நடத்தி வந்த ஆண்டவர் பிரிண்ட்ஸ் சேம்பர்ஸ் நான் வங்கியில் பணம் செலுத்தியதற்கான ரசீதுகள் 8(வரிசை) தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.2** குறியிடப்படுகிறது. நானும் 1 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து திண்டுக்கல் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.78/2012 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கின் பிராதின் நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.3** குறியிடப்படுகிறது. மேற்படி வழக்கின் 30.04.2012 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.4** குறியிடப்படுகிறது. 19.12.2019 அன்று வாதியாகிய நான் 1,2 பிரதிவாதிகள் மீது திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்ட புகாரின் நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.5** குறியிடப்படுகிறது. 24.12.2019 அன்று தினத்தந்தி நாளிதழில் நான் வழங்கிய பொது அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.6** குறியிடப்படுகிறது. 06.10.2020 அன்று திண்டுக்கல் குற்றவியல் நீதிமன்றத்தில் நான் மனு தாக்கல் செய்து அதற்கான உத்தரவின் கணினி நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.7** குறியிடப்படுகிறது. 06.12.2019 அன்று 1 ஆம் பிரதிவாதி அவரது மகனான 2 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதிய தான பத்திரத்தின் சான்று நகல்

தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.8** குறியிடப்படுகிறது. 23.12.2019 அன்று 2 ஆம் பிரதிவாதி 3 ஆம் பிரதிவாதி பேரில் ஏற்படுத்திய கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.9** குறியிடப்படுகிறது. 23.12.2019 அன்று 2 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவாதி பேரில் ஏற்படுத்திய கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.10** குறியிடப்படுகிறது. 27.12.2019 அன்று 2 ஆம் பிரதிவாதி 5 ஆம் பிரதிவாதி பேரில் ஏற்படுத்திய கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.11** குறியிடப்படுகிறது. 15.09.2021 அன்று 3 ஆம் பிரதிவாதி 6 முதல் 8 பிரதிவாதிகள் பேரில் ஏற்படுத்திய கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.12** குறியிடப்படுகிறது. 15.09.2021 அன்று 4 ஆம் பிரதிவாதி 6 முதல் 8 பிரதிவாதிகள் பேரில் ஏற்படுத்திய கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.13** குறியிடப்படுகிறது. 15.09.2021 அன்று 5 ஆம் பிரதிவாதி 6 முதல் 8 பிரதிவாதிகள் பேரில் ஏற்படுத்திய கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.14** குறியிடப்படுகிறது. தாவா படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.03.07 18:10:37 +0530

Additional District Judge(FAC),

Dindigul.